ஓம்
ஸ்ரீகுருப்யோ நம:

# தீப மஹாலக்ஷ்மீ வழிபாடு

## (திருவிளக்கு வழிபாடு)



பேரன்புடன்
**ஆதிகுரு ஸ்ரீப்ரஜ்ஞா தக்ஷிணாமூர்த்தி வித்யாபீடம்**
ஸ்ரீஸ்வாமீ சித்பவாநந்த ஆச்ரமம்
சத்திரப்பட்டி ரோடு, வேதபுரீ,
தேனி-625 531.
☎04546-253908

ஓம்
ஸ்ரீகுருப்யோ நம:

# தெய்வப் பாடல்கள்

ஓம்சக்தி ஓம்சக்தி ஓம் பராசக்தி
ஓம்சக்தி ஓம்சக்தி ஓம் ஓம்சக்தி
ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி
ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்.

கணபதி ராயன் அவனிரு
காலைப் பிடித்திடுவோம்
குணமு  யர்ந்திடவே
விடுதலை கூடி மகிழ்ந்திடவே
(ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்)

வெற்றி வடிவேலன் அவனுடை
வீரத்தினைப் புகழ்வோம்
சுற்றிநில் லாதேபோ - பகையே
துள்ளி வருகுதுவேல்
(ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்)

தாமரைப் பூவினிலே சுருதியைத்
தனியிருந்துரைப்பாள்
பூமணித் தாளினையே கண்ணிலொற்றிப்
புண்ணிய மெய்திடுவோம்.
(ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்)

சொல்லுக்கடங்காவே பராசக்தி சூரத்
தனங்களெல்லாம் வல்லமை தந்திடுவாள்
பராசக்தி வாழியென் றேதுதிப்போம்
(ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்)

பாம்புத் தலைமேலே - நடஞ்செயும்
பாதத்தினைப் புகழ்வோம்
மாம்பழ வாயினிலே - குழலிசை
வண்மை புகழ்ந்திடுவோம்.
(ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்)

செல்வத் திருமகளைத் - திடங்கொண்டு
சிந்தனை செய்திடுவோம்

செல்வமெல் லாந்தருவாள் - நமதொளி
திக்கனைத் தும்பரவும்.

(ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்)

## ஸ்ரீவிநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை
வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை
தணிவிப்பான்
விநாயகனே விண்ணிற்கும்
மண்ணிற்கும் நாதனுமாம்
தன்மையினாற் கண்ணிற்
பணிமின் கனிந்து.

## ஸங்கல்பம்

நாளும் கோளும் நன்னிலை பொருந்திய இந்நன்னாளில் ஆதிகுருவின் பேரருளால் உலகமக்கள் அனைவருக்கும், எங்களுக்கும் அறம் பொருள் இன்பம் வீடு எனும் நாற்பயன் பெறவும் உனது திருவருள் பெருகவும் ஆதிகுருவின் திருமுன்னிலையில் அனைவரும் அனைத்து நலங்களையும் பெறவும், சோம்பல், களைப்பின்றி எப்பொழுதும் முழுமையான ஊக்கம் நிறைந்திருக்கவும் எங்கள் இல்லங்களில் உணவும் நீரும் நிறைந்து விளங்கவும், வாழ்க்கைக்குத் தேவையான வளங்களைப் பெறவும் அவற்றைப் பாதுகாத்து வளர்த்து மேன்மையில் வளர்ச்சி அடையவும் அனைத்து நன்மைகளையும் அடையவும் அறிந்தும் அறியாமலும் செய்த அனைத்துப் பாபங்களும் முற்றிலும் நீங்கவும், குருநாதர், கடவுள், சாஸ்த்திரங்கள் ஆகியவற்றில் முழுமையான, மாறாத, கபடமற்ற நம்பிக்கையும் பக்தியும் வளரவும்,

அறவாழ்க்கையில் நிலைத்து நிற்கவும் நற்பண்புச் செல்வங்கள் நன்கு வளரவும் செய்ய வேண்டிய கடமைகளில் திறமைகளை அடையவும் அனைத்து மக்களும் ஒற்றுமை உணர்வுடன் விளங்கவும் நாடுமுழுவதும் தேவையான, அளவான, மழை பொழியவும் இயற்கை வளமும் உணவுப் பொருட்களும் குறைவின்றி நிறைந்திருக்கவும் நாங்கள் அனைவரும் இம்மனித வாழ்வை மகிழ்ச்சியுடன் பயன்படுத்தி வையத்துள் வாழ்வாங்கு வாழவும் மலைமகள், அலைமகள், கலைமகள் ஆகியோரின் முழுமையான அருளைப் பெறவும் அறிவுநலம், மனநலம், உடல்நலம், பொருள்நலம், சொல்நலம், செயல்நலம், உறவு நலம் ஆகிய அனைத்து நலங்களும் பெற்று ஆன்ம நலமடைய அருட்குருநாதர் முன்னிலையில் அருட் தீப ஒளியில் தீபமஹாலக்ஷ்மியை வழிபடுவதற்கு உறுதியை மேற்கொள்கிறோம்.

# தேவாரம்

உடம்பு எனும் மனை அகத்துள்
உள்ளமே தகளி யாக
மடம்படும் உணர்நெய் அட்டி
உயிர்எனும் திரி மயக்கி
இடம்படு ஞானத் தீயால்
எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை
கழல்அடி காணலாமே.

–திருநாவுக்கரசர் சுவாமிகள்

## தீப ஜோதியாய் வருவாய்

தீபஜோதியாய் வருவாய் – நீ
தீப ஜோதியாய் வருவாய்
திருமகளே பொருள் தருமகளே – நீ
தீப ஜோதியாய் வருவாய்
உனதருள் உளதேல் உலகாம் – இன்றேல்
உலக வாழ்வுகொடும் நரகாம்
தனதானிய ஸௌபாக்கியம் தருவாய் –
(திருமகளே)

பாற்கடல்உதித்தபொற்கொடியே - உந்தன்
பார்வைபெற்றவர்க்கெதும் எளிதாம்
சேர்த்த பன்பயனுறும் செல்வமும் தருவாய்
(திருமகளே)

வீரத் திருமகளின் நோக்கம் -எல்லா
வெற்றியளிக்கும் மன ஊக்கம்
சீரும் சிறப்பும் மனத்திறமையும் தருவாய் -
(திருமகளே)

செந்தாமரை வளர் ஒளியே - ஐயன்
திருமார்பன் உளமணியே
என்தாய் நினதருள் வாழ்க வாழ்க நீ
(திருமகளே)

கமல நயனமிகும் கருணை - எந்தன்
கவிகள் பாடுமிடம் பொழிவாய்
வமிசமுழுதும் எனக்கருள் வரம் தருவாய்
(திருமகளே)

தோகை நினதருளின்துணையால் - நான்
தொட்டதனைத்தும் பயனளிக்கும்
யோகபோக சுகவாழ்க்கையும் தருவாய்
(திருமகளே)

ஓம் தீப மஹாலக்ஷ்ம்யை நம: த்யாயாமி
ஓம் தீப மஹாலக்ஷ்ம்யை நம: ஆவாஹயாமி
ஓம் தீப மஹாலக்ஷ்ம்யை நம: பாத்யம் ஸமர்ப்பயாமி
ஓம் தீப மஹாலக்ஷ்ம்யை நம: அர்க்யம் ஸமர்ப்பயாமி
ஓம் தீப மஹாலக்ஷ்ம்யை நம: ஆசமநீயம் ஸமர்ப்பயாமி
ஓம் தீப மஹாலக்ஷ்ம்யை நம: ஸ்நானம் ஸமர்ப்பயாமி
ஓம் தீப மஹாலக்ஷ்ம்யை நம: வஸ்த்ரம் ஸமர்ப்பயாமி
ஓம் தீப மஹாலக்ஷ்ம்யை நம: உபவீதம் ஸமர்ப்பயாமி
ஓம் தீப மஹாலக்ஷ்ம்யை நம: ஆபரணாநி ஸமர்ப்பயாமி
ஓம் தீப மஹாலக்ஷ்ம்யை நம: கந்தாந்தாரயாமி
ஓம் தீப மஹாலக்ஷ்ம்யை நம: ஹரித்ரா குங்குமம் ஸமர்ப்பயாமி
ஓம் தீப மஹாலக்ஷ்ம்யை நம: அக்ஷதான் ஸமர்ப்பயாமி
ஓம் தீப மஹாலக்ஷ்ம்யை நம: புஷ்பை: பூஜயாமி

# அர்ச்சனை

விளக்கைப் பிளந்து விளக்கினை ஏற்றி
விளக்கினுக் குள்ளே விளக்கினைத் தூண்டி
விளக்கில் விளக்கை விளக்கவல் லார்க்கு
விளக்குடை யான்கழல் மேவலு மாமே.
(திருமந்திரம்-2778)

## 108 திருவிளக்கு போற்றி

பொன்னும் மெய்ப்பொருளும் தருவாய் போற்றி
போகமும் திருவும் புணர்ப்பாய் போற்றி
முற்றறிவு ஒளியாய் மிளிர்ந்தாய் போற்றி
மூவுலகும்நிறைந்து இருந்தாய் போற்றி
வரம்பில் இன்ப வடிவே போற்றி
இயற்கையாய் அறிவொளி ஆனாய் போற்றி
ஈர் ஏழுலகும் ஈன்றாய் போற்றி
பிறர் வயமாகப் பெரியோய் போற்றி
பேரின்பப் பெருக்காய்ப் பொலிந்தாய் போற்றி
பேரருள் கடலாம் பொருளே போற்றி
முடிவில் ஆற்றல் உடையாய் போற்றி
மூவுலகும் தொழ மூத்தோய் போற்றி
அளவிலாச் செல்வம் தருவாய் போற்றி
ஆனந்த அறிவொளி விளக்கே போற்றி

ஓம் என்னும் பொருளாய் உள்ளோய் போற்றி
இருள் கெடுத்து இன்பருள் ஈந்தாய் போற்றி
மங்கள நாயகியே மாமணி போற்றி
வளமை நல்கும் வல்லியே போற்றி
அறம் வளர்நாயகி அம்மையே போற்றி
மின்னொளி அம்மையாம் விளக்கே போற்றி
மண் ஒளிப்பிழம்பாய் வளர்ந்தாய் போற்றி
தையல் நாயகித் தாயே போற்றி
தொண்டர் அகத்து அமர்தூமணி போற்றி
முக்கண் சுடரின் முதல்வி போற்றி
ஒளிக்குள் ஒளியாய் உயர்வாய் போற்றி
சூளா மணியே சுடர்ஒளியே போற்றி
இருள் ஒழித்து இன்பமும் ஈவோய் போற்றி
அருள் மொழிந்து எம்மை ஆள்வோய் போற்றி
அறிவினுக்கு அறிவாய் ஆனாய் போற்றி
இல்லக விளக்காம் இறைவி போற்றி
சுடரே விளக்கே தூயாய் போற்றி
இடரைக் களையும் இயல்பினாய் போற்றி
எரிசுடராய் நின்ற இறைவி போற்றி
ஞானச்சுடர் விளக்காய் நின்றாய் போற்றி
அருமறைப் பொருளாம் ஆதிபோற்றி
தூண்டுசுடர் அணையா ஜோதீ போற்றி
ஜோதியே போற்றி சுடரே போற்றி

ஓதும் உள் ஒளிவிளக்கே போற்றி
இருள் கெடுக்கும் இல்லக விளக்கே
போற்றி சொல்லக விளக்காம் ஜோதீ போற்றி
பலர்காண் பல்லக விளக்கே போற்றி
நல்லக நமசிவாய விளக்கே போற்றி
உவப்பிலா ஒளிர்வளர் விளக்கே போற்றி
உணர்வு சூழ் கடந்ததோர் விளக்கே போற்றி
உடம்பெனும் மனையக விளக்கே போற்றி
உள்ளத்தகளி விளக்கே போற்றி
மடம்படு உணர்நெய் விளக்கே போற்றி
உயர்எனும் திரிமயக்கு விளக்கே போற்றி
இடர்படும் ஞானத்தீ விளக்கே போற்றி
நோக்குவார்க்கு எரிகொள் விளக்கே போற்றி
ஆதியாய் நடுவுமாகும் விளக்கே போற்றி
அளவிலா அளவுமாகும் விளக்கே போற்றி
ஜோதியாய் உணர்வுமாகும் விளக்கே போற்றி
தில்லைப் பொதுநட விளக்கே போற்றி
கற்பனை கடந்த ஜோதீ போற்றி
கருணை உருவாம் விளக்கே போற்றி
அற்புத கோல விளக்கே போற்றி
அருமறைச் சிரத்து விளக்கே போற்றி
பொற்புடன் நடம்செய் விளக்கே போற்றி

உள்ளத்து இருளை ஒழிப்பாய் போற்றி
கள்ளப் புனலைக் கரைப்பாய் போற்றி
உருகுவோர் உள்ளத்து ஒளியே போற்றி
பெருகு அருள் சுரக்கும் பெரும போற்றி
இருள்சேர் இருவினை எறிவாய் போற்றி
அருவே உருவே அருவுருவே போற்றி
பெருகு அருள் சுரக்கும் பெரும போற்றி
திருவருள் பொழிந்திடும் திருவே போற்றி
நந்தா விளக்கே நாயகி போற்றி
செந்தாமரைத் தாள் தந்தாய் போற்றி
தீப மங்கள ஜோதி போற்றி
மதிப்பவர் மாமணி விளக்கே போற்றி
பாகம் பிரிபராபரை போற்றி
ஆகம் மூடுமேல் அமர்ந்தாய் போற்றி
ஏகமும் நடம்செய் எம்மான் போற்றி
ஊழி ஊழி உள்ளோய் போற்றி
ஆழியான் காணா அடியோய் போற்றி
ஆதியும் அந்தமும் அற்றாய் போற்றி
அந்தமில் இன்பம் அருள்வோய் போற்றி
முந்தை வினையை முடிப்போய் போற்றி
பொங்கும் கீர்த்தி பூரணி போற்றி
தண்ணருள் சுரக்கும் தாயே போற்றி

அருளே உருவாய் அமைந்தோய் போற்றி
இருநில மக்கள் இறைவி போற்றி
குருவென ஞானம் கொடுப்பாய் போற்றி
ஆறுதல் எமக்கு அளிப்போய் போற்றி
தீதெல்லாம் தீர்க்கும் திருவே போற்றி
பக்தியில் ஆழ்ந்த பரமே போற்றி
எத்திக்கும் துதி ஏய்ந்தாய் போற்றி
அஞ்சல் என்றவரைச் சார்வோய் போற்றி
ஓதுவார் அகத்துறை ஒளியே போற்றி
ஓங்காரத்து உள்ளொளி விளக்கே போற்றி
எல்லா உலகமும் ஆனாய் போற்றி
பொல்லா வினைகள் அறுப்பாய் போற்றி
புகழ் சேவடி என்மேல் வைத்தோய் போற்றி
செல்வியே செல்வம் தருவாய் போற்றி
அருள்தரும் பூங்கழல் விளக்கே போற்றி
உலகம் உவப்புற வாழ்வருள் போற்றி
உயிர்களில் பசிப்பிணி ஒழித்தருள் போற்றி
செல்வம் கல்வி சிறப்பருள் போற்றி
நல்லன்பு ஒழுக்கம் நல்குவாய் போற்றி
விளக்கிட்டார்க்கு மெய்நெறி விளக்குவாய் போற்றி
நலம் எலாம் உயிர்க்கு நல்குக போற்றி
தாயே நின் அருள் தந்தாய் போற்றி

தூய நின் திருவடி தொழுதனம் போற்றி
போற்றி என்பார் அமரர் விளக்கே போற்றி
போற்றி என்பார் மனிதர் விளக்கே போற்றி
போற்றி என் அன்பு பொலி விளக்கே போற்றி
போற்றி போற்றி திருவிளக்கே போற்றி.

தீப மஹாலக்ஷ்மியை நம:
தூபமாக்ராபயாமி

தீப மஹாலக்ஷ்மியை நம:
திவ்ய மங்கல தீபம் தர்ஶயாமி

தீப மஹாலக்ஷ்மியை நம:
நைவேத்யம் நிவேதயாமி

## தீபாராதனை

தீப மங்கள ஜோதி நமோ நம
தூய அம்பல லீலா நமோ நம
வேதகுஞ்சரி பாதா நமோ நம
அருள்தாராய்!

தீப மஹாலக்ஷ்மீ தேவி கீ ஜய்

## ப்ரார்த்தனை

தீப மஹாலக்ஷ்மீ தாயே, பாரத நாட்டின் தெய்வீகப் பண்பாட்டைப் போற்றிப் பாதுகாத்து வளர்த்துவரும் ஆதிகுரு ஸ்ரீப்ரஜ்ஞா தக்ஷிணாமூர்த்தி வித்யாபீடத்தில் ஆதிகுருவின் பேரருளினால் உனக்கு திருவிளக்கு வழிபாடு நிகழ்த்தும் அரிய வாய்ப்பை அருளினாய்.

நாங்கள் அனைவரும் விருப்பு வெறுப்பின்றி ஒற்றுமையாக அறிவுபூர்வமாக ஆழ்ந்த அமைதியுடனும் சோர்வில்லாமலும் திறமையுடனும் தூய்மையுடனும், நல்ஒழுக்கத்துடனும் ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் செயல்புரிவதற்கு அருள்புரிவாயாக. எங்கள் அனைவருக்கும் நீண்ட ஆயுளையும் நோயற்ற வலிவான உடல் நலத்தையும் பொருட்செல்வத்தையும் உன்பால் பேரன்பினையும் சீரிய அறவாழ்க்கையையும் நற்பண்புகளையும் அருள்வாயாக. வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து யான் எனது என்னும் செருக்கை நீக்கி மனிதப்பிறவியின் மாண்பை உணர உனது அருளை மனமார ப்ரார்த்திக்கிறோம். பேரருள் புரிவாயாக.

கண்களை மூடி சிறிது நேரம் த்யாநம் செய்யவும்.

நின்னைச் சில வரங்கள் கேட்பேன்
அவை நேரே இன்றெனக்குத் தருவாய்
எந்தன் முன்னைத் தீவினைப் பயன்கள்
இன்னும் மூளாது அழிந்திடுதல் வேண்டும்
என்னைப் புதிய உயிராக்கி
எனக்கேதும் கவலையறச் செய்து
மதிதன்னை மிகத் தெளிவு செய்து
என்றும் சந்தோஷம் கொண்டிருக்கச் செய்வாய்.

எண்ணும் காரியங்களெல்லாம் - வெற்றி ஏறப்
புரிந்தருளல் வேண்டும் - தொழில் பண்ணப்
பெருநிதியம் வேண்டும் - அதில் பல்லோர்
துணைபுரிதல் வேண்டும் -
உன்னை கோடி முறை தொழுதேன் இனி
வையத்தலைமை எனக்கருள்வாய்.

அறிவிலே தெளிவு நெஞ்சிலே உறுதி
அகத்திலே அன்பினோர் வெள்ளம்
பொறிகளின்மீது தனியரசாணை
பொழுதெல்லாம் நினது பேரருளின்
நெறியிலே நாட்டம் கருமயோகத்தில்
நிலைத்திடல் என்றிவை அருள்வாய்
குறிகுணம் ஏதும் இல்லதாய் அனைத்தாய்க்
குலவிடு தனிப்பரம் பொருளே!

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்;
திண்ணிய நெஞ்சம் வேண்டும்;
தெளிந்த நல்லறிவு வேண்டும் ;
பண்ணிய பாவமெல்லாம்
பரிதிமுன் பனியேபோல
நண்ணிய நின்முன் இங்கு
நசித்திடல் வேண்டும் அன்னாய்.

**மூர்த்தி எல்லாம் வாழி எங்கள் மோனகுரு வாழி**
**அருள் வார்த்தை என்றும் வாழி அன்பர்வாழி பராபரமே!**

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

ஆதிகுருநாத ஸ்வாமிகீ ஜய்!
ஜகந்மாதா புவநேச்வரீ தேவீகீ ஜய்!
ஸத்குருநாத மஹராஜ்கீ ஜய்! கோ மாதாகீ ஜய்!
கங்கா மாதாகீ ஜய்! காவேரி மாதாகீ ஜய்!
ஸுரபி ஸரஸ்வதீ மாதாகீ ஜய்!
பாரத் மாதாகீ ஜய்!
ஸநாதந தர்மகீ ஜய்!

ஓம்
ஸ்ரீகுருப்யோ நம:

# தீப மஹாலக்ஷ்மீ வழிபாடு

## (திருவிளக்கு வழிபாடு)



பேரன்புடன்

**ஆதிகுரு ஸ்ரீப்ரஜ்ஞா தக்ஷிணாமூர்த்தி வித்யாபீடம்**

ஸ்ரீஸ்வாமீ சித்பவாநந்த ஆச்ரமம்
சத்திரப்பட்டி ரோடு, வேதபுரீ,
தேனி-625 531.
☎04546-253908